**செ. கு. எண்:123** **நாள்: 03.09.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 3.9.2017

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், பி.ஆர்.ஜே. மாதேப்பள்ளி தரப்பு, கந்திக்குப்பம் தேசிய நெடுஞ்சாலையில் இன்று (3.9.2017) சென்னையிலிருந்து பெங்களூர் நோக்கி சென்று கொண்டிருந்த கார், கந்திக்குப்பம் சாலையில் நின்றுகொண்டிருந்த நபர்கள் மீது மோதியதில், மல்லப்பாடியைச் சேர்ந்த திரு. சுப்பரமணி என்பவரின் மனைவி திருமதி வனஜா, கந்திக்குப்பத்தைச் சேர்ந்த திரு. சதிஷ்குமார் என்பவரின் மகன் திரு. கோகுல், திரு. சரவணன் என்பவரின் மகன் திரு. பரத் மற்றும் மருதேப்பள்ளியைச் சேர்ந்த திரு.முனியப்பன் என்பவரின் மகன் திரு. தர்மன் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த திருமதி வனஜா, திரு. கோகுல், திரு. பரத் மற்றும் திரு.தர்மன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் ஐந்து நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும்; சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/-ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**